**நீதித்துறை நடுவர் எண்.1, நீதிமன்றம்**
**திண்டுக்கல்.**

முன்னிலை : திரு.எஸ்.பாக்கியராஜ், பி.எஸ்.ஸி., பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.1,
2026–ம் ஆண்டு ஜூன் 09–ம் நாள் செவ்வாய்கிழமை
CC. No. 91/2021
CNR.No.TNDG03–0091320–2020
கு.வி.மு.ச. பிரிவு 255–ன் கீழ் தீர்ப்புரை

| | | |
|---|---|---|
| **1.** | **வழக்கின் வரிசை எண்** | **CC. No. 91/2021** |
| **2.** | **குற்றம் நடந்த தேதி** | **09.11.2020** தேதியிட்ட கேட்பறிவிப்பு கிடைக்கப் பெற்றதிலிருந்து 15 நாட்கள் கழித்து, 16 வது நாள் |
| **3.** | **புகார்தாரரின் பெயர் மற்றும் முகவரி** | திரு.S.மரியதாஸ் (53/2020)<br>த/பெ. சந்தியாகு,<br>அலுவலக முகவரி :<br>(Kovai Bearing and General Traders)<br>தாலுகா ஆபீஸ் ரோடு,<br>திண்டுக்கல்<br>வீட்டு முகவரி :<br>கதவு எண். 39/124, தெற்கு தெரு,<br>முத்தழகுப்பட்டி, திண்டுக்கல் |
| **4.** | **எதிரியின் பெயர் மற்றும் முகவரி** | திரு. A.D. மைக்கேல் ராஜ்,<br>த/பெ. தனிஸ்லாஸ்,<br>கதவு எண். 544/144,<br>சுப்பிரமணியபுரம், சீலப்பாடி,<br>திண்டுக்கல் |
| **5.** | **குற்றச்சாட்டின் விவரம்** | எதிரி, மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவுகள் 138 –ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக |

| | | |
|---|---|---|
| 6. | **எதிரியின் வாதுரை** | பொய் வழக்கு, குற்றவாளி இல்லை |
| 7. | **<u>தீர்ப்பின் முடிவு</u> –** எதிரி மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றவாளி என முடிவு செய்யப்படுகிறது. | |
| 8. | **தீர்ப்பு பகரப்பட்ட தேதி** | 09.06.2026 |
| 9. | **தீர்வுக்கான காரணங்கள் சுருக்கமான உரை –**<br>**முடிவாக,** வழக்கு காசோலைகள் முழுமையான அல்லது பகுதி கடன் அல்லது பிற கடன் அல்லது கடப்பாட்டினை தீர்ப்பதற்காக எதிரியிடமிருந்து புகார்தாரர் பெற்றுள்ளதாக நீதிமன்றம் அனுமானம் **(Presumed)** செய்துள்ளதை, சாத்தியகூறுகளின் மேம்பட்ட நிலையில் ஒரு நிகழ்தற்தக்க எதிர்வழக்கை **(Preponderance of Probabilities)** முன்னிறுத்தி எதிரி தரப்பில் முறியடிக்கவில்லை **(not rebutted the legal presumption)** என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. | |

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| **S.No.** | **CASE SUMMARY** | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | **The Period of remand of the accused** | : | **Name of the Accused** | **Date of Remand** | **Release on** |
| | | | திரு. A.D. மைக்கேல் ராஜ்,<br>த/பெ. தனிஸ்லாஸ்,<br>கதவு எண். 544/144,<br>சுப்பிரமணியபுரம், சீலப்பாடி,<br>திண்டுக்கல் | – | – |
| (ii) | **The date of filing of the complaint/final report in the Court** | : | **Filing of Complaint** | **Filing of Final Report** | |
| | | | **05.02.2021** | **-** | |
| (iii) | **The date of committal of the case to the Court of Session** | : | Not applicable | | |

<table>
<tr><td>(iv)</td><td>The date of questioning of the accused U/Sec.228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case maybe</td><td>:</td><td colspan="4">03.05.2024</td></tr>
<tr><td rowspan="2">(v)</td><td rowspan="2">Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts; except routine petitions like petitions U/Sec 317 of the Code</td><td rowspan="2">:</td><td colspan="2">Crl.M.P.No.</td><td>Date of Filing</td><td>Result</td></tr>
<tr><td colspan="2">-</td><td>-</td><td>-</td></tr>
<tr><td rowspan="2">(vi)</td><td rowspan="2">Date of examination in-chief and cross-examination of a witness</td><td rowspan="2">:</td><td colspan="2">Name of the Examination</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW1</td><td>மரியதாஸ்</td><td>22.08.2025</td><td>17.03.2026</td></tr>
<tr><td>(vii)</td><td>Date of examination of the accused U/Sec 313 of the Code</td><td>:</td><td colspan="4">26.09.2025</td></tr>
<tr><td>(viii)</td><td>Details of abscondence of an accused and his appearance/producti onas the case may be; and</td><td>:</td><td colspan="4">Nil</td></tr>
<tr><td>(ix)</td><td>Grant of stay by superior Courts and</td><td>:</td><td colspan="2">Sessions Court CMP Numbers</td><td>High Court No and Date of Stay</td><td>Result</td></tr>
</table>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **the results thereof** | | - | - | - |

இத்தனி நபர் புகார் 05.02.2021 ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, இறுதியாக 01.06.2026 ஆம் தேதியன்று என் முன்பாக விசாரணைக்கு வந்தது. புகார்தாரர் தரப்பில் வழக்கறிஞர் **திரு.C. ராஜசேகர்** அவர்கள் ஆஜராகி வாதுரைத்தார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் **திரு.P. தியாகு** அவர்கள் ஆஜராகி வாதுரைத்தார். இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்ததுமான இவ்வழக்கில் வழக்காவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

<u>**தீர்ப்புரை**</u>

**1. இவ்வழக்கின் எதிரி** மாற்றுமுறையாவணங்கள் சட்டம் 1881–ன் பிரிவுகள் 138–ன் கீழான குற்றம் புரிந்துள்ளார் எனவும், எதிரிக்கு உரிய தண்டனை வழங்கி, புகார்தாரருக்கு உரிய இழப்பீடு வேண்டியும் புகார்தாரரால் புகார்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. புகார்தாரர் வழக்கின் சுருக்கம் :**

**திரு. மரியதாஸ் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார்.** புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு, எதிரி, **22.10.2020 தேதியிட்ட காசோலை எண். 100708 தொகை ரூ.9,00,000/– க்கு " ICICI Bank திண்டுக்கல் "** கிளைக்கான காசோலை கொடுத்துள்ளார். மேற்படி புகார்தாரர் அவரது வங்கியான **" Bank of Baroda திண்டுக்கல் "** கிளையில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி

காசோலையானது " **Funds Insufficient** " என்ற காரணம் குறிப்பிட்டு 23.10.2020ம் தேதியிட்டு திருப்பப்பட்டுள்ளது. இது குறித்து புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை **05.11.2020** அன்று அனுப்பியுள்ளார். எதிரி, வழக்கறிஞர் அறிவிப்பை **09.11.2020**ம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார். மேற்படி கேட்பு அறிவிப்பு பெற்ற 15 நாட்களுக்குள் எதிரி காசோலைக்குண்டான தொகையை செலுத்தவில்லை. எனவே எதிரி காசோலை மோசடி குற்றம் புரிந்துள்ளதாகவும், எதிரி மீது மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் படி நடவடிக்கை எடுத்து இழப்பீடு பெற்றுத்தரக் கோரி புகார்தாரரால் இப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **இவ்வழக்கில்** எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் எதிரிக்கு எதிரான குற்றசாட்டின் சாராம்சத்தினை கு.வி.மு.ச.பிரிவு 251ன்படி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே வழக்கு புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்கு என வகை செய்யப்பட்டது.

4. **புகார்தாரர் தரப்பு சாட்சிய விவரம் :**

எதிரி குற்றத்தை மறுத்துரைத்ததால் எதிரி மீதான குற்றத்தை நிரூபணம் செய்யும் பொருட்டு, புகார்தாரர் தரப்பில் புகார்தாரர் **திரு. மரியதாஸ்** என்பவர் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர்மூலம் **பு.சா.ஆ.1 முதல் பு.சா.ஆ.6** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அவை பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | 22.10.2020 தேதியிட்ட புகார்தாரருக்கு எதிரி | .. பு.சா.ஆ.1 .. ஆகவும் |

| | | |
|---|---|---|
| | வழங்கிய காசோலை | |
| 2. | 22.10.2020 ம் தேதியிட்ட கலெக்சன் சலான் | .. பு.சா.ஆ.2 .. ஆகவும் |
| 3. | 23.10.2020 ம் தேதியிட்ட ரிட்டன் மெமோ | .. பு.சா.ஆ.3 .. ஆகவும் |
| 4. | 05.11.2020 ம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | .. பு.சா.ஆ.4 .. ஆகவும் |
| 5. | 05.11.2020 ம் தேதியிட்ட அஞ்சல் ரசீது | ..பு.சா.ஆ.5 .. ஆகவும் |
| 6. | 09.11.2020 ம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புதல் ரசீது கணிணி நகல் | ..பு.சா.ஆ.6 .. ஆகவும் |

குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், எதிரி தரப்பில் பு.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். இத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**5. புகார்தாரர் தரப்பு** சாட்சியம் முடிக்கப்பட்டவுடன், புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாகத் தோன்றுகிற சாட்சிய விவரங்களை எதிரிக்கு எடுத்துக்கூறி, அது குறித்து எதிரி நேர்முகமாக விளக்குவதற்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு, கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) –ன் படி எதிரியிடம் வினவியபோது புகார்தாரர் தரப்பு சாட்சியங்கள் பொய்சாட்சியம், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருத்தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**6. இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1) எதிரி மீதான மாற்றுமுறையாவணங்கள் சட்டம் 1881 பிரிவு 138 ன் கீழான குற்றம் புகார்தாரர் தரப்பில் சந்தேகத்தின் இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா?

2) எதிரி ஒரு நிகழ்தற்தக்க எதிர் வழக்கை முன்னிறுத்தி அதை நிலைநாட்டி சட்டப்பூர்வ அனுமானங்களை முறியடித்து தன் மீதான நிரூபிக்கும் சுமையை விடுவித்துக் கொண்டனரா? என்பதுவேயாகும்.

**7. புகாரர்தாரர் தரப்பில்** எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்று பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் திரு. மரியதாஸ் பு.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். புகார்தாரர் பு.சா.1 திரு. மரியதாஸ் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் புகார்தாரருக்கு செலுத்த வேண்டிய தொகையை திருப்பி செலுத்தும் பொருட்டு, எதிரி, **22.10.2020 தேதியிட்ட காசோலை எண். 100708 தொகை ரூ.9,00,000/- க்கு " ICICI Bank திண்டுக்கல் "** கிளைக்கான காசோலை கொடுத்துள்ளார். மேற்படி புகார்தாரர் அவரது வங்கியான **" Bank of Baroda திண்டுக்கல் "** கிளையில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி காசோலையானது **" Funds Insufficient "** என்ற காரணம் குறிப்பிட்டு 23.10.2020 ம் தேதியிட்டு திருப்பப்பட்டுள்ளது. இது குறித்து புகார்தாரர் எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பை **05.11.2020** அன்று அனுப்பியுள்ளார். எதிரி, வழக்கறிஞர் அறிவிப்பை **09.11.2020** ம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார். மேற்படி கேட்பு அறிவிப்பு பெற்ற 15 நாட்களுக்குள் எதிரி காசோலைக்குண்டான தொகையை செலுத்தவில்லை என சாட்சியம் அளித்துள்ளார். வழக்கு மூலமானது உரிய கால அவகாசத்திற்குள் ஏற்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக காணமுடிகிறது. எனவே மாற்றுமுறையாவணச் சட்ட அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக அமைந்துள்ளது.

**8.** **எதிரி** மாறான நிரூபணத்தின் மூலம் புகார்தாரரின் வழக்கை உரிய சாட்சியம் மற்றும் சான்றாவணத்தின் மூலம் முறியடித்துள்ளனரா? என்று பார்க்கையில், எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவுகள் 251 மற்றும் 313 ன் கீழான விசாரணையின் போது **"பொய்வழக்கு"** என எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் காசோலை மற்றும் காசோலையில் உள்ள கையொப்பம் குறித்து மறுக்கப்படவில்லை.

**9.** எதிரி தரப்பு வழக்கினை நிரூபணம் செய்வதற்கு பு.சா.1 குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். **பு.சா.1 ன் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில்** " நான் முத்தழகு பட்டியில் 50 வருடமாக வசித்து வருகிறேன். அதே பகுதியில் வசித்து வரும் சூசை ராபர்ட் என்பவரை தெரியும் என்றால் சரிதான். உடன் பிறந்த சகோதரர். நான் பேரிங் இரும்பு வியாபாரம் செய்து வருகிறேன். 25 வருடமாக மேற்படி தொழில் செய்து வருகிறேன். நான் தொழில் வரி செலுத்திவருகிறேன். மாதம் சுமார் ரூ.20 முதல் 30 ஆயிரம் வரை வருமானம் வரும். நான் வருமான வரி செலுத்திவருகிறேன். வருமானவரி கணக்கு அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்தவில்லை என்றாலும் அதனால் தான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி சீலப்பாடி சுப்பரமணியபுரத்தில் குடியிருந்து வருகிறார். எவ்வளவு காலம் வசித்து வருகிறார் என்றால் அதைபற்றி தெரியாது. எதிரியை பணம் வாங்குவதற்கு முன்பு 4,5 வருடமாக தெரியும். எதிரி RMTC யில் டிரைவர் வேலை பார்த்து VRS பெற்றுள்ளார். RMTC யில் எந்த டிப்போவில் வேலை பார்த்தார் என்றால் தெரியாது. VRS எந்த வருடம் கொடுத்தார் என்றால் தெரியாது. எதிரியை குடும்ப ரீதியாக

தெரியாது என்றால் சரிதான். எதிரியை தொழில் ரீதியாக மற்றும் கொடுக்கல் வாங்கல் ரீதியாக தெரியும். நான் பொருட்களை வாங்குவதற்காக எங்குளங்கு உள்ளது என எதிரி தகவல் சொல்வார். எதிரி இரும்பு கடை வைத்திருந்தாரா என்றால் இல்லை. எதிரியின் குடும்ப விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். அவருடைய சொத்து மற்றும் வருமான விவரங்கள் தெரியாது என்றால் சரிதான். எதிரி என் வீட்டில் வைத்து பணம் கேட்டார். எதிரி எவ்வளவு பணம் கேட்டார் என்றால் ரூ.9 இலட்சம் கேட்டார். 03.09.2020 அன்று கேட்டு பணத்தை வாங்கிகொண்டார். காலை 11,12 மணிக்கு வந்து கேட்டார். நான் உடனே பணத்தை கொடுத்துவிட்டேன். இந்த வழக்கு பரிவர்த்தனைக்கு முன்பு வேறு கொடுக்கல் வாங்கல் இருந்ததா என்றால் இல்லை. 03.09.2020 அன்று முதல் முறையாக கேட்டாரா என்றால் ஆமாம். அந்த பணம் எனக்கு எவ்வாறு வந்தது என்றால் நான் வியாபாரம் செய்து வைத்திருந்த பணம். புகார் அறிவிப்பு மற்றும் பிரமான வாக்குமூலத்தில் பணம் எவ்வாறு வந்தது என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். தற்போது புகார் மற்றும் பிரமாணவாக்குமூலம் காட்டப்பட்டு கேட்கப்பட்டது சாட்சி தற்போது இல்லை என குறிப்பிடுகிறார். 03.09.2020 அன்றே காசோலையை கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த காசோலையில் தேதி மற்றும் கையெழுத்து போட்டு கொடுத்தார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காசோலையில் தேதி மற்றும் கையொப்பம் ஒரு மையாகவும் நிரப்பப்பட்ட பகுதிகள் வேறு ஒரு மையாகவும் உள்ளது என்றால் சரிதான். நான் நிரப்பினேன். தேதி மற்றும் கையொப்பம் எதிரியினுடையது. 22.10.2020 அன்று பணத்தை திருப்பி பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்லி காசோலையை ஒப்புதலுக்காக கொடுத்தார் என்றால் சரிதான். நான் போன் செய்து கேட்டேன் நேரில் சென்று கேட்கவில்லை. புகார் மற்றும் அறிவிப்பில் நான் நேரில் சென்று கேட்டதாக உள்ளது என்றால் சரிதான். நான் மாலை நான்கு மணிக்கு சென்று கேட்டேன்.

அதன்பிறகு தான் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். பேங்க் ஆப் பரோடா வங்கியில் எனக்கு கணக்கு உள்ளது. எனது வீட்டிற்கும் அதற்கும் 3 கி.மீ இருக்கும் என்றால் சரிதான். நான் காசோலையை பேங்க் ஆப் பரோடா வங்கியில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 10, 11 மணியளவில் தாக்கல் செய்தேன். 22.10.2020 அன்று தாக்கல் செய்தேன். பணம் இல்லை என சொல்லி திருப்பப்பட்டது. 23.10.2020 அன்று தெரியவந்தது. அதன்பிறகு 5 ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டோம். எதிரியின் வங்கி காசோலை ICICI வங்கி கிளைக்குறியது. காசோலை எண். 100708. ICICI வங்கி சாலை ரோடு, மெயின் பிரான்ச் கிளைக்குரியது. இந்த வழக்கை நான் என் தம்பி சொல்லித்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு எதிரியை தெரியாது என்றாலும் அதனால்தான் அவருடைய குடும்ப விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் எனது தம்பிக்கும் தான் பரிவர்த்தனை இருந்தது என்றாலும் ரூ.1 இலட்சம் எதிரி கடனாக பெற்றிருந்தார் என்றாலும் அதற்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலையை கொடுத்திருந்தார் என்றாலும் சரியல்ல. எதிரி மேற்படி ரூ.1 இலட்சத்தை எனது தம்பிக்கு திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் கசோலையை திரும்ப கேட்டும் தராமல் என்மூலமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரியை தெரியாது என்பதால் தான் அவர் எங்கு எந்த டிப்போவில் வேலை பார்த்தார் என தெரியவில்லை என்றாலும் அவரது சொத்து மற்றும் வருமான விவரங்கள் தெரியவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி எதிரி எந்த காலத்திலும் எந்த நேரத்திலும் என்னிடம் பணம் ஏதுவும் வாங்க வில்லை என்றாலும் அதற்காக காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த காசோலை மோசடி வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. " என குறிப்பிடப்பட்டுள்ளது.

10. **மேற்கண்ட** சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்து பார்க்கையில், புகாதாரருக்கு எதிரியை தெரியாது எனவும், எதிரிக்கும் புகார்தாரரின் தம்பிக்கும் தான் பரிவர்த்தனை இருந்ததெனவும், புகார்தாரரின் தம்பியிடம் ரூ.1லட்சம் கடனான பெற்றிருந்தார் எனவும், அதற்கு ஆதரவாக இந்த வழக்கு காசோலையை கொடுத்திருந்தார் எனவும் பணத்தை திருப்பி செலுத்திவிட்டார் எனவும், காசோலையை திருப்பி தராமல் புகார்தாரர் மூலம் தவறாக பயன்படுத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளார் எனவும் எதிரி தரப்பில் முன்நிறுத்தப்பட்டு புகார்தாரர் தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. காசோலை சம்மந்தமாக வேறு நடவடிக்கைகள் எதிரி தரப்பில் எடுக்கப்பட்டதாக காணப்படவில்லை. எதிரி தரப்பில், முன்நிறுத்தப்பட்ட எதிர்வாதங்களை எதிரி உரிய சாட்சியம், சான்றாவணங்கள் மற்றும் மாறான நிரூபணங்களின் மூலம் முன்னிறுத்தி நிரூபணம் செய்யவில்லை. மேலும் இவ்வழக்கின் சட்ட அனுமானத்தினை முறியடிக்க தவறியுள்ளனர் என்பதை காணமுடிகிறது. புகார்தாரரால் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் மாற்றுமுறையாவணச் சட்ட அனுமானத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. **எனவே எதிரி மாற்றுமுறையாவணங்கள் சட்டம் 1881 பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி கு.வி.மு.ச. பிரிவு 255(2)ன் படி தீர்மானிக்கிறது.**

**11. முடிவாக,** எதிரி மாற்றுமுறையாவணச் சட்டம் 1881ன் பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்து **எதிரிக்கு ஆறு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்து கு.வி.மு.ச. பிரிவு 255(2)ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.** மேலும் எதிரி, புகார்தாரருக்கு தொகை

**ரூ.9,00,000/- (ரூபாய் ஒன்பது லட்சம் மட்டும்)-** ஐ இழப்பீடாக செலுத்த வேண்டும் என்றும் கு.வி.மு.ச.பிரிவு 357 உடன் இணைந்த மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138 ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. எதிரி இழப்பீடு தொகையை உத்தரவு தேதி முதல் 30 நாட்களுக்குள் செலுத்த தவறினால் மேலும் **2 மாத மெய்க்காவல் சிறைத் தண்டனையை** எதிரி அனுபவிக்க வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

என்னால் சொல்லப்பட்டதை சுருக்கெழுத்தரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு **2026 -ம் ஆண்டு ஜூன் மாதம் 09 ம் நாள்** திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.06.10 17:49:15 +0530

நீதித்துறை நடுவர் எண். 1
திண்டுக்கல்.

**<u>பின் இணைப்பு</u>**

**<u>1. புகார்தாரர் தரப்பு சாட்சி</u>**

1. பு.சா.1 – திரு. மரியதாஸ்

**<u>2. புகார்தாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| **1.** | **பு.சா.ஆ.1..** | 22.10.2020 தேதியிட்ட புகார்தாரருக்கு எதிரி வழங்கிய காசோலை |
| **2.** | **பு.சா.ஆ.2 ..** | 22.10.2020 ம் தேதியிட்ட கலெக்சன் சலான் |
| **3.** | **பு.சா.ஆ.3 ..** | 23.10.2020 ம் தேதியிட்ட ரிட்டன் மெமோ |
| **4.** | **பு.சா.ஆ.4 ..** | 05.11.2020 ம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு |
| **5.** | **பு.சா.ஆ.5 ..** | 05.11.2020 ம் தேதியிட்ட அஞ்சல் ரசீது |
| **6.** | **பு.சா.ஆ.6 ..** | 09.11.2020 ம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புதல் ரசீது கணிணி நகல் |

**3. <u>எதிரி தரப்பு சாட்சி – இல்லை</u>**

**4. <u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்</u> <u>–இல்லை</u>**

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2026.06.10 17:49:22 +0530

**நீதித்துறை நடுவர் எண். 1**
**திண்டுக்கல்.**